களுக்குப் பழுது ஏற்பட்டிருப்பது என்பது உண்மைதான். தற்காலிகமாகப் பாதுகாக்க கண்ணாடி அல்லது வேறு பொருட்களை உபயோகப்படுத்தி, மூடுவதற்கு இந்து சமய அறநிலையத் துறை ஆணையாளருக்கு ஆணையிடப்பட்டிருக்கிறது.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சித்திரச் சபையிலுள்ள, மிகப் பிரபலமான தஞ்சாவூர் ஆர்ட் என்று சொல்லப்படுகின்ற வரிசையிலே வருகின்ற அந்தச் சிறப்பான சித்திரங்களை அமைச்சர் அவர்கள் சொன்னது போல் நேரிலே பார்த்து வியந்தார்கள். பல வெளிநாட்டவர்களும், இந்தியத் தலைவர்களும் வந்தபோது அவர்களை நேரிலே அழைத்துச் சென்றிருக்கிறேன். அவர்களும் அதை ஆவலுடன் பார்த்துப் பாராட்டியிருக்கிறார்கள். சித்திர சபைக்குப் போதுமான விளம்பரம் இல்லை . கலைப் பொக்கிஷங்கள் உலகிற்குத் தெரியாமல் இருக்கின்றன. இந்து சமய அறநிலையத் துறையும் சுற்றுலாத் துறையுமாகிய இரண்டு துறைகளும் மாண்புமிகு அமைச்சரவர்களின் கீழ் இருப்பதால், இந்தச் சித்திர சபைக்கு முக்கியத்துவம் கொடுத்து, வெளி உலகிற்குத் தெரிவிக்கின்ற வகையிலே அதை வெளிக் கொணர ஆவன செய்வார்களா? அந்தச் சித்திரச் சபையில் விளக்குகள் சரியாக இல்லை. சரியான முறையில் அந்த விளக்குகளைப் போட்டு, அந்தச் சித்திரங்கள் பார்ப்பவர்களுக்கு எடுப்பாகத் தெரியும் வகையில் வசதி செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலாத் துறையிடம் சொல்லி, குற்றாலத்திற்கு வருகின்றவர்களின் கவனத்தை ஈர்க்கின்ற வகையில், பெயர்ப் பலகைகள் மற்றும் 'ப்ரோச்சர்ஸ்' வெளியிடும்படி சொல்லப்பட்டிருக்கிறது

நிலத்தின் விலை உயர்வுக்கு ஏற்ப விலைமதிப்பு நிர்ணயம் செய்யும் வழிகாட்டிக் கோட்பாடுகளை மாற்றுதல்.

51—(*வினா எண் 6811) திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலத்தின் விலை உயர்வுக்கு ஏற்ப விலை மதிப்பு நிர்ணயம் செய்யும் வழிகாட்டிக் கோட்பாடுகளை மாற்றுவது பற்றி அரசு பரிசீலனை செய்து வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

1987 நவம்பர் 11]

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளுக்கு நாள் நிலத்தின் மதிப்பு அதிகமாகிக் கொண்டேயிருக்கிறது. ஆனால் பத்திரப் பதிவு செய்யும்போது மட்டும் அந்த நிலத்தினுடைய மதிப்பு குறைத்துக் காட்டப்படு கிறது. அதைப் போக்க வருங்காலத்தில் நடவடிக்கை எடுக்கப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, இந்த வழி காட்டும் மதிப்பீடு என்பது இறுதியான முடிவு அல்ல. அதை அடிப்படையாக வைத்து பத்திரப் பதிவு செய்பவர்களை வற்புறுத்தக் கூடாது என்றும் ஆணையிடப்பட் டிருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி : * *

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு உறுப்பி னர் சொல்கிற இவ்விஷயம் பற்றி புதியதாக தகவல் தயாரிக்கப் படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தில் குற்றச் சாட்டே கூடாது. அதை தனியாக எழுதிக் கொடுங்கள். இதை நீக்குகிறேன்.

திருமானிக்குழி வானகுரீஸ்வரர் ஆலய ராசகோபுரம் புதுப்பித்தல்.

52—(*வினா எண் 9354) திரு. துரை அன்பரசன்: மாண்பு மிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லிக்குப்பம் தொகுதி—திருமானிக்குழி எனும் ஊரி லுள்ள அருள்மிகு வானகுரீஸ்வரர் ஆலய ராசகோபுரம் சிதைந் துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், புதுப்பிக்க முயற்சிகள் மேற்கொள்ளப் படுமா?

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.